# தமிழ் இலக்கியங்களில்

## அறமும் அருளும்

தொகுதி 2

















பதிப்பாசிரியர்கள்
முனைவர் ஆ. மகாலட்சுமி
திருமதி சுகந்தி நாடார்
முனைவர் இலட்சுமி கார்மேகம்



தமிழ்த்துறை (அரசு உதவி), என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)
பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி - 642 001

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து,
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி,
சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"
(மதுரைக்காஞ்சி: 489-492)

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (திருக்குறள் -76)




என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி)
தேசிய மீள்தர மதிப்பீட்டு "ஏ" தகுதி
ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் 9001 - 2015
90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி - 642 001.

9789387009523

₹ 400/-

பிரபாக பிரிண்ட் 0422 2646036

# தமிழ் இலக்கியங்களில் அறமும் அருளும்

## (பன்னாட்டுக் கருத்தரங்கம்)


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் ஆ. மகாலட்சுமி**<br>**திருமதி சுகந்தி நாடார்**<br>**முனைவர் இலட்சுமி கார்மேகம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜனவரி, 2019 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை (அரசு உதவி)**<br>**என்.ஜி.எம் கல்லூரி**<br>பொள்ளாச்சி - 642 001. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | **XVIII + 348 - 366** |
| விலை | : | உரூ. 400/- |

**ISBN : 978 - 93 - 87009- 52 - 3**


# Ethics and Devotion in Tamil Literature

## (International Conference)


| | | |
|---|---|---|
| Editors | : | **Dr. A. Mahalakshmi**<br>**Miss. Suganthi Nadar**<br>**Dr. Lakshmi Karmegam** |
| Copyrights | : | Editors |
| First Edition | : | January, 2019 |
| Published by | : | **Department of Tamil**<br>**N.G.M. College**<br>Pollachi - 642 001. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | **XVIII + 348 - 366** |
| Prize | : | **Rs. 400/-** |

107

# சிலப்பதிகாரத்தில் இறைவழிபாடு

முனைவர் பா. அருள்ஜோதி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
என்.ஜி.எம் கல்லூரி.

இறைவழிபாடு என்பது மனிதனை நல்வழிப்படுத்தவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், மக்களை ஒன்றிணைக்கும் ஒரு அங்கமாகும். இத்தகைய பண்பாடு சங்ககாலம் தொடங்கி பல்வேறு நிலைகளில் பலவாறு போற்றப்பட்டு வருகிறது. சிலப்பதிகாரத்தில் எவ்வாறு இருந்தது என்பதை இக்கட்டுரைவுரைக்க இயலுகிறது.

## வழிபாடு

***"மலையை தெய்வமாகக் கருதி வழிபட்டனர் என்பதை***
***புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங் கழைக்"***
***(அரங்கேற்றக் காதை 97)***

என்ற அடி தெரிவிக்க காணலாம். **"தெய்வக் காவிரித் தீது தீர் சிறப்பும்" (நாடு காண் காதை 8)**தெய்வத் தன்மையுடைய காவிரியின் தீதுதீர் சிறப்பு என்பதில் காவிரி நீர் தீமையை விளக்கும் தெய்வத்தன்மையடையது புலப்படுகிறது. ஐந்தெழுத்தாலான மந்திரமொழிக்குப் பொருளாகிய தெய்வம் நமக்கு வழித்துணையாகும் என்பதை **"மொழிப்பொருள் தெய்வம் வழித்துணை ஆக" (நாடுகாண் காதை 99)** என்ற அடி புலப்படுத்துகிறது. காடுகளில் மயக்கும் தெய்வம் இருந்தது என்பதை **"மயக்கும் தெய்வம் இவ்வன் காட்டு உண்டு" (காடு காண் காதை 192)** எனக் குறிப்பிடுகிறது. தெய்வம் மந்திர வலிமைக்கு ஆற்றாது உண்மையை உரைத்த செய்தியை,

***"கோவலன் நாவில் கூறிய மந்திரம்***
***பாய் கலைப் பாவை மந்திரம் ஆதலின்***
***வன - சாரிணி யான் மயக்கம் செய்தேன்***
***புன மயில் சாயற்கும், புண்ணிய முதல்விக்கும்***
***என் திறம் உரையாது ஏகு என்று ஏக"***
***(காடு காண் காதை 196-200)***

கோவலன் நாவால் கொற்றவை மந்திரத்தை ஓதினான். அதனால். அச்சமடைந்த அத்தெய்வம் ஐயனே நான் வசந்தமாலை அல்லள். இக்காட்டிலே திரியும் வனதேவதை உன் மீது காமுற்று இங்ஙனம் நடித்து உன்னை மயக்கிவிட்டேன் என்பிழையைப் பொறுத்து மயில் போன்ற சாயலுடைய கண்ணகிக்கும் புண்ணிய முதல்வியாகிய கவுந்தியடிகளுக்கும் நான் செய்த இவ்வஞ்சகச் செயலை கூறாமல் இருப்பீராக என்று கூறி மறைந்து விட்டது. காடுகளில் தெய்வங்கள் இருந்ததாக நம்பிக்கை கொண்டிருப்பதை அறிய முடிகிறது.



## சிவபெருமான் வழிபாடு

அழகிய இளம்பிறை நிலவானது தேவர்கள் போற்றும் சிவபெருமானால் சூடப்பட்ட அருமையுடைத்தாயினும் அது உன்னோடு பிறந்த உடன் பிறப்பாகையால் அப்பிறை மதியைப் பெருமான் நினக்கு அழகிய நெற்றியாகத் தந்தானோ? எனக் கண்ணகியின் நலத்தை கோவலன் வருணிப்பதிலிருந்து சிவபெருமான் பிறைசூடியது புலப்படுகிறது. இதனை

***"குழவித் திங்கள் இமையவர் ஏத்த***
***அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்***
***உரிதின் நின்னோடு உடன் பிறப்பு உண்மையின்***
***பெரியோன் தருக - திரு நுதல் ஆக என"***
***(மனையறம் படுத்த காதை 38-41)***

என்ற அடிகள் தெரிவிக்கின்றன.

## முருகன் வழிபாடு

முருக பெருமான் கயிலாயம் என்னும் அழகிய மலையிலே எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் மகனாவார் என்பதை

***"கயிலை நல் மலை இறை மகனை!"***
***(குன்றக் குரவை 16)***

என்ற அடி தெரிவிக்கிறது. குறமகளாகிய வள்ளியின் கணவர் முருகன் என்பதை

***"குறமகள் அவள் எம் குலமகள் அவளொடும்,***
***அறுமுக ஒருவ!" (குன்றக் குரவை 18)***

என்ற அடிகள் விளக்கக் காணலாம்.

ஆறுமுகங்களைக் கொண்ட முருகன் உனக்குத் தரவேண்டிய உரிமை யாதும் பெற்றில்லாவிடினும் நான் உன்னைக் கண்டு துன்புறுவதைக் காண்பதற்காகவே தன் கையிலுள்ள அழகிய சுடருடைய நெடிய வேலினை உன் முகத்தில் கடை சிவந்ததும் குளிர் பொருந்தியதுமான இரு கண்களாகத் தந்தான் போலும் எனக் கோவலனின் கூற்றிலிருந்து முருக பெருமான் வழிபாடு இருந்ததும், அவர் ஆறுமுகங்களைக் கொண்டதும் புலப்படுகிறது.

முன்னொரு காலத்துப் பார் சூழ்ந்த கடலின் நடுவே புகுந்து மாமரமாய் நின்ற சூரபதுமனைப் பிளந்து வீழ்த்தியவர். மயில் மீதேறி அவுணர்களின் ஆற்றலை அழித்தவர். கார்த்திகைப் பெண்டிர் அறுவரால் வளர்க்கப்பட்டவர். ஆறுமுகமும் பன்னிரண்டு கைகளையும் கொண்டவர் என்பதை,

***"பார் இரும் பௌவத்தினுள் புக்கு, பண்டு ஒருநாள்***
***சூர் மா தடிந்த சுடர் இலைய வெள் வேலே***
***....அவுணர் பீடு அழியும் வண்ணம்***
***சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்***

*திரு முலைப்பால் உண்டான் திருக் கை வேல்"*
*(குன்றக்குரவை 7-11)*

என்ற வரிகள் தெரிவிக்கக் காணலாம்.

## கோயில்கள்

வழிபாடு என்பதில் கோயில்கள் முக்கிய இடம் பெறுகின்றன. அவ்வகையில்

*"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்*
*அறு முகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும்*
*வால் வளை மேனி வாலியோன் கோயிலும்*
*நீல மேனி நெடியோன் கோயிலும்*
*மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்*
*மாமுது முதல்வன் வாய்மையின் வழாஅ*
*நான்மறை மரபின் தீமுறை ஒருபால் "*

## திருமால் வழிபாடு

அருவிகள் வழிகின்ற திருவேங்கடம் மலையில் தனது இருபுறமும், ஞாயிறு மற்றும் திங்கள் கதிர்பரப்பி நிற்க அவற்றின் இடைநிலைத் தானத்திலே மின்னலாகிய புதிய ஆடையை உடுத்தி ஒளிவீசும் இந்திரவிலாகிய அணிகலனைப் பூண்டு கருநீல மேகம் நிற்பது போலப் பகைவரை வருத்தும் சக்கரத்தினையும் பால்போலும் வெண்மையான சங்கினையும் அழகிய தாமரை போன்ற தமது இரு கைகளில் ஏந்தி அழகான கௌத்துவ மணிமாலையைத் தனது திரு மார்பிலே பூண்டு பொன்னிறப் பூக்களாலான ஆடையையும் உடுத்துள்ள செங்கண்களையுடைய திருமாலின் நிறகின்ற கோலத்தையும் எனக்குக் காட்டு என மறையோன் திருமாலின் கோலத்தை குறிப்பிடுகிறார்.

*"வீங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்*
*ஓங்கு உயர் மலையத்து உச்சி மீமிசை*
*விரி கதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி*
*இரு மருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து*
*மின்னும் கோடி உடுத்து விளங்கு வில் பூண்டு*
*நல் நிற மேகம் நின்றது போலப்*
*பகை அணங்கு ஆழியும் பால் வெண் சங்கமும்*
*தகை பெறு தாமரைப் கையின் ஏந்தி*
*நலம் கிளர் ஆரம் மார்பில் பூண்டு"*
*(காடு காண் காதை 41-51)*

திருவரங்கத்தில் திருமால் கிடந்த கோலத்தை

*"ஆயிரம் விரித்து எழு தலை உடை அரும் திறல்*
*பாயல்-பள்ளி பலர் தொழுது ஏத்த*
*விரி திரைக் காவிரி வியன் பெரும் துருத்தி*
*திரு அமர் மார்பன் கிடந்த வண்ணமும் "*
*(காடு காண் காதை 34- 40)*



ஆயிரம் தலைகளை விரித்து எழுகின்ற அருந்திறல் பொருந்திய ஆதிசேடனின் படுக்கை மீது பலரும் தொழுது வணங்கும் படி பரந்த அலைகளையுடைய காவிரியாற்றின் இடைக்குறையில் (திருவரங்கத்தில்) திருமகள் விரும்பி உறையும் மார்பினையையும் திருமால் பள்ளி கொண்டுள்ள கோலத்தையும் தரிசிக்க மறையோன் வந்ததாக கூறுவதிலிருந்து திருமால் மார்பில் திருமகள் உறைந்திருப்பதும். இறைவன் ஆதிசேடனின் மீது பள்ளி கொண்டிருந்ததையும் அறியமுடிகிறது.

## அருகன் வழிபாடு

எல்லாவற்றையும் அறியும் அறிவுடையவன் அறநெறியில் ஒழுகுபவன் மக்கள் அறிவின் எல்லையைக் கடந்தவன் எல்லா உயிர்கட்கும் இன்பம் தருபவன் எண்வகை வினைகளையும் வென்றவன் செய்யத் தகுந்ததைச் செய்து முடிக்கும் சித்தன் முக்காலத்தையும் உணரும் தன்மையுடையவன் அறச் செயல்கள் எல்லாம் மூலமாக உள்ளவன் தரும முதல்வன் தேவர் தலைவன் உண்மைப் பொருளாய் உள்ளவன் தூய்மையுடையவன் பழமையானவன் புலவன் சினத்தை வென்றவன் தேவர்களுக்கு எல்லாம் முதல்வன் வீட்டுலகின் தலைவன் மேலானவன் குணவிரதத்தை உடையவன் ஐம்புலன்களை அடக்கியவன் விணினல் இயங்குவோன் எல்லாவற்றிற்கும் மூலகாரணன் எண்வகைச் சித்தியும் கைவரப் பெற்றவன் பெரியவன் தலைமையில் சிறந்தோன் ஒளியாக விளங்குபவன் இறைவன் ஆசிரியன் இயல்பாகவே தோன்றிய குணங்களை உடையவன் எங்கள் தலைவன் குறைவில்லாத புகழுடையவன் குணப்பெருங்கோமான் எவர்க்கும் நன்மைபுரிபவன் எல்லாவகைச் செல்வமும் உடையவன் தானே தோன்றியவன் நான்கு திருமுகங்களைக் கொண்டவன் அங்கம் பயந்தோன் அருகன் எல்லா உயிர்களிடத்தும் அருள் பூண்டொழுகும் முனிவன் பண்ணவன்( கடவுள்) எண்வகைக் குணங்களையும் உடையவன் பகுத்தற்கரிய பழம் பொருளாய் உள்ளோன் விண்ணவன் வேத முதல்வன் அறியாமை இருள் நீங்க விளங்கும் ஒளி இத்தகைய பெயர்களை உடையவனும் ஆகம ஒளியாய் விளங்குபவனுமாகிய அருகதேவனைச் சார்ந்தால் அல்லாது பிறவி என்னும் மூடப்பட்ட அறையிலிருந்து வெளிவர முடியாது எனச் சாரணர் தலைவன் அருகனின் புகழைக் கூறினான். இதனை

*"அறிவன், அறவோன், அறிவு வரம்பு இகந்தோன்*
*செறிவன், சினேந்திரன், சித்தன், பகவன்*
*தரும முதல்வன், தலைவன், தருமன்*
*பொருளன், புனிதன், புராணன், புலவன்,*
*சினவரன், தேவன், சிவகதி நாயகன்*
*பரமன், குணவதன், பரத்தில் ஒளியோன்,*
*தத்துவன், சாதுவன், சாரணன், காரணன்,*
*போதார், பிறவிப்பொதி- அறையோர் என"*
*(நாடு காண் காதை 176-190)*

என்ற வரிகள் விளக்கக் காணலாம். அருக தேவனை வழிபடுபவர்கள் புலால் உணவைத் துறந்து, பொய்கூறா நோன்பைக் கடைப்பிடித்து அழுக்காறு, அவா வெகுளி இன்னாச்சொல் என்னும் குற்றங்களை அடியோடு நீக்கி சமண ஆகமங்களை அறிந்து ஐம்புலன்களையும் வென்ற சமணத்துறவிகள் கூடுவர் என்பதை

*"புலவு ஊண் துறந்து பொய்யா விரதத்து*
*அவலம் நீத்து, அறிந்து அடக்கிய கொள்கை*
*மேய் வகை உணர்ந்த விழுமியோர் குழீஇய*
*ஐ-வகை நின்ற அருகத்தானத்துச்"*
*(நாடு காண் காதை 15-18)*

என்ற வரிகள் தெரிவிக்கக் காணலாம். அருகன் தேவனுக்கு திருமஞ்சன நீராட்டு விழாவும், தேர்த் திருவிழாவும் எடுக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டதை,

*"நீர் அணி விழவினும், நெடுந் தேர் விழவினும்"*
*(மேலது22)*

என்ற வரிகள் தெரிவிக்கக் காணலாம்.

## புத்ததேவன் வழிபாடு

புத்ததேவன் வழிபாடு இருந்தது என்பதை

*"பணை ஐந்து ஓங்கிய பாசிலைப் போதி*
*அணி திகழ் நீழல் அறவோன் திருமொழி"*
*(மேலது 11-12)*

ஓங்கிய ஐந்து கிளைகளையும் பசுமையான இலைகளையுமுடைய போதிமரத்தின் எழில் விளங்கும் நிழலிலே எழுந்தருளியுள்ள புத்ததேவன் அருளிய பிடக நூல் என்பதிலிருந்து புத்த தேவன் வழிபாடு இருந்தது புலனாகிறது.

## முடிவுரை

சிலப்பதிகாரத்தில் இயற்கை வழிபாடுகள் தொடங்கி பல கோயில்களை அமைத்தும், விழாக்கள் எடுத்தும், பல்வேறு கடவுள்களையும் வழிபட்டுள்ளனர். போர்க்காலங்களிலும் இறைவனை வழிபட்டுள்ளது புலனாகிறது. சமணக்கடவுளாக வணங்கப்பட்ட அருகதேவன் அனைத்து கடவுளருக்கும் மேலாக வைத்து பேற்றப்பட்டுள்ளார்.